1987 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1985 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கேட்கப்பட்ட கேள்வி 1987 பிப்ரவரி மாதம் 19 ஆம் தேதி கமர்ஷியல் டாக்ஸ அண்டு ரிலிஜியஸ் என்டோமென்ட் துறையிலிருந்து இங்கு தகவல் வந்திருக்கிறது. இரண்டு ஆண்டு களாகியிருக்கிறது. அமைச்சரின் கவனத்திற்கு துறைச் செயலாளர் இதைக் கொண்டு வந்தாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதாவது உங்களுடைய கவனத்திற்கு உங்கள் துறைச் செயலாளர் கொண்டு வந்தாரா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் கொண்டு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் அந்தத் துறைச் செயலாளரை * உங்களிடம் 20 ஆம் தேதிக்குள் அந்தக் கோப்பைக் கொண்டு வந்து ஆணையைப் பெற உத்தர விடுகிறேன்.

இதுமட்டுமல்ல. சுமார் 275 கேள்விகள் 1985 ஆம் ஆண்டில் கேட்கப்பட்டவை—பல்வேறு துறைகளில் நிலுவையில் இருக் கின்றன.

சுமார் 547 கேள்விகள்—1986 ஆம் ஆண்டு கேட்கப்பட்ட கேள்விகள் பல்வேறு துறைகளில் பதில் அளிக்கப்படாமல்—சட்ட மன்றச் செயலகத்திற்கு பதில் அனுப்பப்படாமல் இருக்கின்றன. ஆகவே இவைகளைக் குறித்த பதில்களையெல்லாம் 20 ஆம் தேதிக்குள் சம்பந்தப்பட்ட துறையினர் சட்டமன்றச் செயலகத் திற்கு அனுப்ப வேண்டும் என்று நான் உத்தரவிடுகிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஐந்தாவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் 11—5—1987 ஆம் தேதிய ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.